**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் – மட்டம் 04**
**இறுதிப் பரீட்சை – 2022/2023**
**LLU4806 – குற்றவியல் சட்டம்**

---

**திகதி: 04 ஏப்ரல் 2024** **நேரம்: பி.ப. 01.30 – பி.ப. 04.30**

---

**வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 08**
**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. எட்வார்ட் கொழும்பு நகர்ப்புற பகுதிகளில் வீடுகள் பலவற்றை சொந்தங்கொண்டிருக்கும் வணிகன் ஒருவனாவான். அந்த வீடுகளில் ஒன்று தகவல் தொழில்நுட்பத்தில் பல்வேறு டிப்ளோமோ மற்றும் பட்டப்படிப்புக்களை வழங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு அருகில் அமைந்துள்ளது. எட்வார்ட் இந்த வீட்டை அந்த (நிறுவன) மாணவர்களுக்கு ஆண்டுதோறும் வாடகைக்கு வழங்கி வந்தான். அவன் ஜனவரி 2023 இல், இந்த நிறுவனத்தின் மாணவனான தில்ஷான் என்பவனுக்கு வீட்டை வாடகைக்கு வழங்கினான். வாடகை ஒப்பந்தத்தின்படி வீட்டை அதிகபட்சமாக மற்ற ஆறு மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். தில்ஷானின் ஐந்து நண்பர்கள் அறைகளைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டதுடன் அவர்கள் பெப்ரவரி 2023 இல் வீட்டில் குடியமர்ந்தனர்.

   ஒரு மாதத்திற்குப் பிறகு, அயலவர் சிலர், வீட்டில் தங்கியிருந்த மாணவர்கள் மதுப் பழக்கமுடையவர்கள் எனவும் போதைக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிசில் முறைப்பாடு செய்தனர். மேலும் மாணவர்களின் நடத்தையால் தொல்லை ஏற்பட்டுள்ளதுடன் அயலவர்களது அமைதி சீர்குலைந்துள்ளதாகவும் முறைப்பாடு செய்தனர். பின்னர் அயலவர் செய்த முறைப்பாட்டின் பேரில் பொலிசார் எட்வார்டை கைது செய்தனர்.

   தனது வாடகைக் குடியிருப்பாளர்களின் இத்தகைய நடத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாதெனவும் அதனால் அவன் எந்த குற்றத்திற்கும் பொறுப்பல்ல எனவும் எட்வார்ட் கூறினான். வீடுகளை வாடகைக்கு விடுவது தொடர்புடைய சட்டமானது குற்ற மனம் (*mens rea*) இல்லாமை என்பது ஒரு காப்புரிமையாகுமென வெளிப்படையாக ஏற்பாடு செய்கிறது.

   எட்வார்டின் குற்றத்தன்மையினை ஆராய்க. தொடர்புடைய தண்டனைச் சட்டக்கோவைப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் உமது உமது விடையை ஆதாரப்படுத்துக.

   **(20 புள்ளிகள்)**

2. "...McNaughton's வழக்கில் நீதிபதிகள் வெளிப்படுத்திய கருத்துக்கள், குற்றவியல் வழக்கொன்றில் சித்தசுவாதீனமின்மை (insanity) எவ்விதம் வலிதான காப்புரிமை ஒன்றாகும் என்ற வினா மீதான சட்டத்தின் மிகவும் அதிகாரப்பூர்வமான விளக்கங்களாகக் கருதப்படுகின்றன..."

*Deorao Vs Emperor, 1946 AIR 321 at p 330* (as cited in Dr. Hari Singh Gour's Indian Penal Code, 16th Edition 2023 at p 241).

மேற்கண்ட கூற்றின் நிழலில் இலங்கை குற்றவியல் சட்டத்தில் சித்தசுவாதீனமின்மை (insanity) எனும் காப்புரிமையின் தோற்றம் மற்றும் அதன் பின்வந்த வளர்ச்சிகள் குறித்து, விமர்சன ரீதியாக ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

3. இரண்டு பாதாள உலகக் கும்பலின் அங்கத்தவர்களான சிராவும் ஜோதியும் ஒரு பொது சதுக்கத்தில் நடந்த பேரணியில் பிரபலமான உள்ளூர் அரசியல்வாதி ஒருவரை சுட்டுக் கொல்ல (தனித்தனியே) சுதந்திரமாய் அனுப்பப்பட்டனர். குறித்த அதே காரியத்தை நிறைவேற்ற மற்றவரும் அனுப்பப்பட்டுள்ளார் என்பது சிராவுக்கோ ஜோதிக்கோ தெரியாது. பேரணி நாளன்று, சிரா பொதுச் சதுக்கத்தினை நோக்கி உயர்ந்திருந்த கோபுரத்திற்குப் பின்னால் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதுடன் ஜோதி பொது சதுக்கத்திற்கு அருகிலுள்ள ஒரு கவனிப்பாரற்ற கட்டிடத்தின் (மாடியின்) முன் பாகத்திலும் தன்னை (balcony) நிலைநிறுத்திக் கொண்டான். அரசியல்வாதி கூட்டத்தில் பேசத் தொடங்கியபோது, சீராவும் ஜோதியும் அவரை ஒரே நொடிக்குள் இருவருமாக சுட்டதோடு இருவரும் தத்தமது இலக்கை அடைந்துவிட்டதாகவும் கருதினர். சிரா மற்றும் ஜோதி இருவரும் சத்தவமைதியாக்கிகளைப் (silencers) பயன்படுத்தியதால் துப்பாக்கிச்சூட்டின் சத்தம் கூட்டத்தில் இருந்த யாருக்கும் கேட்கவில்லை. அவரது மார்பில் உண்டான பலத்த துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் அரசியல்வாதி கீழே விழுந்தார். அவர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் அவருக்கு அவசர அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. இருப்பினும், அறுவை சிகிச்சை முடிந்த சில மணி நேரங்களிலேயே அவர் உயிரிழந்தார். பிரேதப் பரிசோதனையில் ஒரே ஒரு துப்பாக்கி குண்டுதான் அவரைத் தாக்கியிருந்தமை தெரியவந்தது.

   சிரா மற்றும் ஜோதி ஆகிய இருவரும் சிசிடிவி (CCTV) பதிவுகளின் உதவியுடன் கண்டறியப்பட்டு கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

   சிரா மற்றும் ஜோதியின் குற்றத்தன்மையினை ஆராய்க.

   தொடர்புடைய தண்டனைச் சட்டக்கோவைப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

4. ஜஸ்டின் என்பவன் எல்பி கேஸ் (LP gas) விற்பனையில் ஈடுபட்டுள்ள ப்யூர் கேஸ் கம்பெனி லிமிடெட்டின் (Pure Gas Company Limited) ஒரு தொழிலாளி ஆவான். விநியோகம் செய்யும் பண்டமாற்று வண்டிகளிலிருந்து வெறுமையான எரிவாயு சிலிண்டர்களை இறக்கி உரிய களஞ்சியசாலைகளில் அடுக்கி வைப்பது ஜஸ்டினின் முக்கிய கடமையாகும். ஒரு வெள்ளிக்கிழமை, ஜஸ்டின் தனது அன்றைய நாள் வேலையை முடித்துவிட்டு வழக்கம் போல் சென்றான். மறுநாள் காலையில், 1005 என்ற வரிசை எண் கொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்று காணாமல் போனதை களஞ்சியசாலைப் பொறுப்பாளன் கண்டறிந்தான். அன்றைய தினம் பணியில் இருந்த பண்டமாற்று வண்டியின் சாரதி ஒருவன், ஜஸ்டின் பொதியின் மீது எரிவாயு சிலிண்டர் ஒன்றை வைத்து சைக்கிளில் செல்வதைக் கண்டதாகத் தெரிவித்தான். பின்னர், ஜஸ்டினின் சகோதரனான மார்ட்டினுக்குச் சொந்தமான குப்பை உலோகங்கள் சேகரிக்கும் வேலை முற்றத்தில் வெறுமையான 1005 எரிவாயு சிலிண்டர் கண்டுபிடிக்கப்பட்டது.

   தற்சமயம் ப்யூர் கேஸ் கம்பெனி லிமிடெட், ஜஸ்டின் மற்றும் மார்ட்டின் மீது திருட்டுக் குற்றச்சாட்டை சுமத்த முடியுமா என்பது குறித்து உமது ஆலோசனையை நாடுகின்றது. ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

5. "பாதிக்கப்பட்ட நபர் சம்மதமளித்திருக்காத சூழ்நிலையில், எதிரி உடலுறவு கொள்ளும் உளக்கருத்தினைக் கொண்டிருந்தார் என்று காட்டப்படவேண்டிய அவசியம் கிடையாது உள்நுழைத்தற் செயல் (act of penetration) உளக்கருத்துடன் புரியப்பட்டது என்பதும் பாதிக்கப்பட்டவர் சம்மதிக்கிறாரா இல்லையா என்பதில் அவர் அலட்சியமாக இருந்தார் என்பதும் மட்டுமே காட்டப்படவேண்டும்..."

   William, Glanville, *Textbook of Criminal Law*, South Asian Edition 2017, p 462.

   கற்பழிப்பு குற்றம் தொடர்பான இலங்கையின் சரியான சட்ட நிலைப்பாட்டை மேற்கண்ட கூற்று பிரதிபலிக்கின்றதா? தொடர்புடைய நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை மேற்கோள்காட்டி விமர்சன ரீதியாக ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

6. தொடர்புடைய நிததிச்சட்ட சட்ட ஏற்பாடுகள், வழக்குத் தீர்ப்புக்கள் மற்றும் பொருத்தமான நடைமுறை உதாரணங்களை மேற்கோள் காட்டி, குற்றவியல் பொறுப்புடைமைக்கு எதிரான காப்புரிமையாக அவசியத்தேவைக்கான காப்புரிமையின் (defence of necessity) பின்னணியிலுள்ள அறிவார்த்தம் குறித்து ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

7. விஷ்வா கொழும்பிலுள்ள பல கடைகளுக்கு அழகுசாதன பொருட்கள் மற்றும் தோல் பராமரிப்பு பொருட்களை வழங்கும் தனியார் நிறுவனத்திற்கு தனது சேவைகளை வழங்கிய விற்பனையாளன் ஆவான். அந்தந்த கடைகளால் கோரப்பட்ட பொருட்களை ஒப்படைத்து, விலைப்பட்டியல் மதிப்பின்படி பணம் வசூலிப்பது அவனது பொறுப்பாகும். அவன் வசூலித்த பணத்தை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட தேவைப்படுத்தப்பட்டான். இருப்பினும், டிசம்பர் 2023 இன் இறுதியில், விஷ்வா அந்த மாதத்தில் அவன் சேகரித்த அனைத்து பணத்தையும் தனது சொந்த கணக்கில் வைப்பிலிட்டான். அவன் ஏன் தனது தனிப்பட்ட கணக்கில் பணத்தை வைப்பிலிட்டான் என நிறுவனம் கேள்வி எழுப்பியபோது, தனது குடும்பத்தின் எதிர்பாராத அவசர நிதித் தேவை காரணமாக அவ்வாறு செய்ததாகவும், ஜனவரி 2024 இல் பணத்தை நிறுவனத்தின் கணக்கில் வைப்பிலிட எண்ணுவதாகவும் விஷ்வா கூறினான்.

   மேற்கண்ட சூழ்நிலையில் புரியப்பட்ட குற்றங்கள் ஏதேனும் இருந்தால், இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் தொடர்புடைய ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் நிழலில் ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

8. பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு விரிவான குறிப்பெழுதுக.

   i) பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டல் தொடர்பான தணிக்கும் மன்றுரை

   ii) சட்டமுறையான பாதுகாவலிலிருந்து ஆட்கவர்தல் எனும் குற்றம்

**(20 புள்ளிகள்)**

-பதிப்புரிமை பெற்றது-